தா ரூ. 3. Regd. No. M. 2419.

மாத்வ மித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 16 புஸ்தகம் 16 | ஸ்வபாநுஸம்வத்ஸரம் மார்கசீர்ஷமாஸம் 11—12—'43 சனிவாரம் | No. 7 நெ. 7

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1	ஸ்ரீ பகவத் கீதை	143
2	த்வைத வேதாந்த பால சிக்ஷை	149
3	ஸ்ரீமத்வ விஜயம்	153
4	ஹரிகதாம்ருத ஸாரம்	157
5	குரு ஆபோத தௌம்யர்	161
6	விவாஹ விளம்பரம்	165
7	திருக்கோயிலூர் ஸ்ரீ ரகூத்தமஸ்வாமிகளின் ஆராதனை	166
8	விசேஷ தினங்கள்.	166

பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு கண் கோடை யெனப் போற்று கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஹம்பி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்,
1/1, பிராஞ்சல் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி,
பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

சப் ஆபீஸ்: 48, பெரியதெரு,
கும்பகோணம்.

ஆசிரியர் ஆத்யம் பாகவத
ரங்கனாதாசாரியார்

மாத்வமித்திரன்

மாத்வர்களின் சாஸ்திரீய மான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீ மத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிர தாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வ வகு ப்பு புண்ய புருஷர்களின் சரித் திரங்கள் வேதாந்த சர்ச்சை கள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேகிரந்தங் களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷ யங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீ மத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரி கைக்கே உடனே சந்தாதாரா ய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோ ணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பண மாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரி கைக்கு வருட ஆரம்பமாகும்

மானேஜர், மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம்,
கும்பகோணம்.

ओं श्री गुरुभ्यो नमः

மாத்வ மித்திரன்.

ஸ்ரீ பகவத்கீதை

2-வது அத்யாயம்

ஸாங்க்ய யோகம்

(முன் 122ம் பக்கத் தொடர்ச்சி)

ஹே பார்த்த! ஹே அர்ஜுன! யத்ருச்சயா ப்ரயத்தனமன்னியில் அல்லது ஈசுவரனின் இச்சையால் உபபன்னம் நேர்ந்ததும் ச மற்றும் அபாவ்ருதம் திறை எடுக்கப்பட்டுப்போன ஸ்வர்க்கத்வாரம் ஸ்வர்க்கத்திற்கு வாசலானதும் ஈத்ருசம் இப்பேர்ப்பட்டதுமான புண்ய ஸாதனமாயுள்ள யுத்தம் யுத்தத்தை ஸுகின: ஸுகத்திற்குக் காரணமான புண்யங்களைக் கொண்ட க்ஷத்திரியா: க்ஷத்திரியர்கள் லபந்தே அடைகின்றனர்.

அர்ஜுனன்; ஜயம் உண்டானால் யுத்தம் ச்ரேயஸ்ஸாதனமாய் ஆகலாம்; அது சரியே. பராஜயம் ஏற்பட்டால் அது ச்ரேயஸ்ஸாதனமாய் எப்படி ஆகும்?

கிருஷ்ணர்: ஜயம் ஏற்பட்டால் பிந்திய சுலோகத்தில் சொன்னபடி தனிகள் ஏற்பட்டு யுத்தம் ச்ரேயஸ்ஸாதனமாய் ஆகும். ஸ்வர்க்கத்வாரம் யுத்தமானது ஸ்வர்க்கத்திற்கு ஸாதனமாகும். அக்னிஷ்டோமாதி யாகமும் ஸாதனமாகுமே என்றால் அபாவ்ருதம் எனப்பட்டது. யுத்தமானது ஆவரணம்—திறை—ப்ரதிபந்தகம் நீக்கப்பட்டுப் போன ஸ்வர்கத்வாரம் ஆகும். அக்னிஷ்டோமாதிகள் செய்யப்பட்டால் வெகு காலம் கழித்து ஸ்வர்க்கம் ப்ராப்தம் ஆகும், யுத்தத்தால் அப்படி அன்று, உடனே கிடைக்கும். அபாவ்ருதம் ஆவ்ருதம் என்றால் ஆவரண ரூபமாகிய

கதவாகும். அபாவ்ருதம் என்றால் திறக்கப்பட்டுப்போன கதவு உள்ளதாகும் என்று பொருள்படும். ஸ்வர்க்கத்வாரம் ஸ்வர்க்கம் என்பது சுகத்தை அனுபவிக்கும் ஸ்தானம் ஆகும். அதன் த்வாரம் என்றால் அதை அடையும் ஸாதனமாகும். யுத்தம் செய்தால் பாரத்ரிக சுகஸாதனம் ப்ரதிபந்தகம் இல்லாமல் திறக்கப்பட்டுப் போனதாய் ஆகும். யுத்தம் ச்ரேயஸ்ஸாதனம் எனப்படுகிறதே, ஒரு க்ஷத்திரியனுக்கு அவனுடைய ஆயுஸ்ஸில் யுத்தமே நேரிடாமற்போனால் அவனுக்கு கதி என்ன? அவனுக்கு ச்ரேயஸ் ஏற்பட தந்தை முதலானவர்களுள் யாருடனாவது அவன் யுத்தம் செய்யவேண்டுமோ? என்று கேட்பாரேயா, அப்படி அன்று. யத்ருச்சயாச உபபன்னம் அந்த யுத்தம் பிரயத்தனமன்னியில் ஏற்பட்டிருக்கவேண்டும். யத்ருச்சயா ஈசுவரனின் இச்சையால் ஏற்பட்டிருக்கவேண்டும். "யத்ருச்சா ஹி தரிச்சாஸ்யாத்" என்கிறது பிரமாணம். அநாயாஸமாய் ஈசுவர இச்சையின் பேரில் யுத்தம் ஏற்பட்டால் அதை விடலாகாது. அர்ஜுனா! உனக்கோ, அவ்வாறுதான் யுத்தம் பிரயத்தனமன்னியில் ஈசுவரனின் இச்சையால் ஏற்பட்டிருக்கிறது. ஈத்ருசம் யுத்தம் இப்பேர்ப்பட்ட மகத்வம் வாய்ந்தது. ஜயம் வந்தால் கீர்த்தி, ப்ரதிஷ்டை, ராஜ்யம் இவைகள் எல்லாம் ஏற்படும். பராஜயம் ஏற்பட்டால் ஸ்வர்க்கத்திற்கு ஸாதனம். ஈத்ருசம் அபாவ்ருதமான ஸ்வர்க்கத்வாரமானதும் அதாவது திறந்து வைக்கப்பட்ட ஸ்வர்க்க வாசலுமானதும், அநாயாஸமாய் ஈசுவர இச்சையால் ஏற்பட்டதுமான யுத்தம் ஸுகின: க்ஷத்திரியா: பார்த்த லபந்தே எல்லா க்ஷத்திரியர்களுக்குமே கிடைக்காது. ஸுகின: சுகமுடையவர்கள் என்றால் சுகத்திற்குக் காரணமான புண்யவான்கள் என்று பொருள். சுகத்தில் விருப்பமுள்ளவர்கள் என்றும் சொல்லலாம். இப்பேர்ப்பட்டவர்களான சுகிகள்தான் லபந்தே அடைவார்கள். உன்னைப் போன்ற சோகிப்பவர்கள் அடையமாட்டார்கள் என்றும் பொருள்படும். ஸுகின: லபந்தே என்றால் சுகமுள்ளவர்கள் யுத்தத்தை அடைகின்றனர் என்று சொல்லலாகாது. யுத்தத்தால் ஏற்படும் சுகம் யுத்தத்தை ஏற்படச் செய்யாது, அதற்காக ஸு

கின: என்றால் சுகத்திற்குக் காரணமான புண்யம்தான் யுத்தத்தை ஏற்படச் செய்கிறது என வேண்டும். அல்லது யே லபந்தே தே ஸுகின: எந்த க்ஷத்திரியர்கள் யுத்தத்தை அடைகின்றனரோ அவர்கள் சுகம் கொள்வார்கள் எனலாம். ஈத்ருசம் யத்ருச்சையாய் ஏற்பட்டிருப்பதாயும் அபாவ்ருதமான ஸ்வர்க்கத்வாரமாயும் இருப்பதால் இந்த யுத்தம் ஈத்ருசம் இவ்வாறு இஹத்திலும் பரத்திலும் சுகத்திற்கு ஸாதனமாகும் எனலாம். ஆகையால் ஜயமானாலும் பராஜயமானாலும் ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனமாய் இருப்பதால் இந்த யுத்தம் செய்யவேண்டியதே ஆகும். அதனால் "நிஹத்ய தார்த்தராஷ்ட்ரான் ந: காப்ரீதி: ஸ்யாத்" என்றும்" ஸ்வஜனம் ஹி கதம் ஹத்வா ஸுகின: ஸ்யாம மாதவ" என்றும் நீ சொன்னது சரியன்று. ஸுகின: க்ஷத்திரியா: லபந்தே அபாவ்ருதம் ஸ்வர்க்கத்வாரம் புண்யவான்களாகவே இருக்கும் க்ஷத்திரியர்கள் அடையும் அபாவ்ருதமாயுள்ள ஸ்வர்க்கத்வாரமானது எது உண்டோ, அது யத்ருச்சயா உபபன்னம் பகவத் இச்சைப்படி அனாயாஸமாய் ஏற்படும் பக்ஷத்தில் அதை விட்டுவிட அருகமாகுமா? அப்போர்ப்பட்டது அவசியம் அனுஷ்டிக்கப்பட வேண்டியதே ஆகும். ஈத்ருசம் இப்போர்ப்பட்டது எனக்கு ஏற்படும் பக்ஷத்தில் நான் அனுஷ்டிப்பேனே, அதைச் சொல்லுமே என்று கேட்பாயோ, க்ஷத்திரியனுக்கு யுத்தம்தான் இப்போர்ப்பட்டது. அதை அனுஷ்டிப்பாய்.

अथ चेत्त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥ ३३ ॥

33 அத சேத் த்வமிமம் தர்ம்யம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி
தத: ஸ்வதர்மம் கீர்த்திம் ச ஹித்வா பாபமவாப்ஸ்யஸி

அத அப்படிக்கிருந்தும் த்வம் நீ இமம் இந்த தர்ம்யம் தர்மத்திற்கு ஸாதனமான ஸங்க்ராமம் யுத்தத்தை ந கரிஷ்யதி சேத் செய்யாவிடின் தத: அதனால் யுத்தத்தைச் செய்யாமல் விடுவதால் ஸ்வதர்மம் உனக்கு விஹிதமான தர்மத்தையும் ச மற்

றும் கீர்த்திம் கீர்த்தியையும் ஹித்வா விட்டு பாபம் பாபத்தையும் அவாப்ஸ்யஸி அடைவாய்.

அர்ஜுனன்: யுத்தம் செய்வதில் இஹத்திலும் பரத்திலும் ச்ரேயஸ் இருக்கட்டும். அப்படி இருந்தும் "ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண" என்றும் "அபி த்ரைலோக்ய ராஜ்யஸ்ய" என்றும் "அவாப்ய பூமௌ அஸபத்னம்ருத்தம் ராஜ்யம் ஸுராணாமபி சாதிபத்யம்" என்றும் பின்னடி நான் சொன்னதுபோல் ஜயம் முதலான ச்ரேயஸ்ஸுகளை நான் அபேக்ஷிப்பதில்லை. ஏனெனில் அப்படி யுத்தம் செய்யாவிடில் தோஷமில்லையே! யுத்தம் செய்யாவிடில் தோஷம் இருந்தால் யுத்தம் செய்யவேண்டியதுதான். க்ருஷ்ணா! இதற்கு என்ன சமாதானம் சொல்லும்.

க்ருஷ்ணர்: அத பக்ஷாந்தரம் அதாவது யுத்தம் செய்யவேண்டுமென்று நான் சொல்லும் கக்ஷியை விட்டு யுத்தம் செய்யலாகாதென்ற உன் கக்ஷியை நீ கைக்கொண்டு யுத்தம் செய்வதை நீவிட்டால் பாபம் அவாப்ஸ்யஸி மஹத்தான பாபம் அடைவாய். அத அப்படிக்கிருந்தும் அதாவது யுத்தம் பிந்தி சொல்லப்பட்டதாய் இருப்பினும், உன் கக்ஷியில் அபிமானம் கொண்டு தர்மத்திற்கு ஸாதனமான இந்த யுத்தத்தைச் செய்யாவிடில் என்று பொருள் படும். அத யுத்தம் ஆரம்பித்தபின் ஆரம்பித்த யுத்தத்தை நீ விட்டுவிட்டால் என்றும் அர்த்தம் கூறலாம். இதனால் நீ யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன் உனக்கு இத்தகைய புத்தி ஏற்பட்டிருந்தால் அது ஒருவாறாக இருக்கும் என்று சூசிக்கப்பட்டதாய் ஆகிறது. தத: அப்பொழுது தத: இந்த யுத்தத்தைச் செய்யாததால் ஸ்வதர்மம் ஸ்வதர்மத்தை ஸ்வதர்மம் யுத்த ரூபமான ஸ்வதர்மத்தை ஸ்வதர்மம் ஸ்வதர்மத்தில் பலனை ஐஹிகம் ஆமுஷ்மிகம் ஆகிய சுகத்தை ஸ்வதர்மம் தன்னுடைய தர்மம் இன்னது என்று சொல்லப்பட்டிருக்கும் அந்த வேத சாஸ்திராதிகளையும் கீர்த்திம் ச கீர்த்தியையும் ஹித்வா பாபம் அவாப்ஸ்யஸி விட்டு ஸ்வதர்மத்தை த்யாகம் செய்ததால் ஏற்படும் பாபத்தையும் பாபம் அதன் மூலமாய் ஏற்படும் நரகாதி துக்கத்தையும் அடைவாய். ஸ்வதர்மம் கீர்த்திம் ச ஹித்வா பாபம் சப்ராப்ஸ்யஸி

ஸ்வதர்மமும் கீர்த்தியும் போவது மட்டிலுமன்று; பாபமும் வந்து சேருமென்று பொருள்படும். கீர்த்திம் ஹித்வா ஸ்வதர்மம் பாபம் ப்ராப்ஸ்யஸி நீ உன் கீர்த்தியைப் போக்கிக் கொள்வதோடு ஸ்வதர்மம் ஸு + அதர்மம் "நநிவர்த்தேத ஸங்க்ராமாத்" என்று சாஸ்திர நிஷித்தமான யுத்தத்தினின்றும் விலகுவதான மகத்தான அதர்மத்தையும், அதனால் ஏற்படும் பாபத்தையும், அதன் மூலமான நரகாதி துக்கங்களையும் அடைவாய் என்று சொன்னதாயும் சொல்லலாம். ஸ்வதர்மம் ஹித்வா பாபம் அவாப்ஸ்யஸி அநேக ஜன்மாக்களில் ஸம்பாதிக்கப்பட்டதாய் ஸ்வ உனக்குச் சொந்தமாய் ஏற்பட்ட தர்மம் எல்லா புண்யத்தையும் தொலைத்துக்கொள்வதுமன்னியில், அரசன் செய்த பாபத்தையும் அடைவாய். யுத்தத்தினின்றும் ஓடினால் சத்ரு கொன்று விடுவான். அவ்வாறு கொல்லப்பட்டவன் அவன் செய்த ஸுகிருதங்கள் எல்லாம் பாழாய்ப்போவதோடு, ராஜன் செய்த ஸர்வ பாபத்தையும் அடைவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "யஸ்து பீத: பராவ்ருத்த: ஸங்க்ராமே ஹன்யதே பரை:। பர்த்துர் யத் துஷ்க்ருதம் கிம்சித் தத் ஸர்வம் ப்ரதிபத்யதே। யச்சாஸ்ய ஸுகிருதம் கிஞ்சித் அமுத்ரார்த்தம் உபார்ஜிதம்। பர்த்தா தத் ஸர்வ மாதத்தே பராவ்ருத்த ஹதஸ்யது" என்று மனு ஸ்மிருதியும் "ராஜா ஸுக்ருத மாதத்தே ஹதானாம் விபலாயினாம்" என்று யாக்யவல்க்ய ஸ்மிருதியும் கூறுகின்றன. "பாபமேவாச்ரயேத் அஸ்மான்" என்றும், "ஏதான் ந ஹந்துமிச்சாமி" என்றும், "யதி மாமப்ரதிகாரம்" என்றும் நீ சொன்னது சரியன்று. கிருஷ்ணா! இதைக்கேட்டு எனக்கு பயமாயிருக்கிறது. நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுமே என்று கேட்டால், நான் சொல்வதாவது பாபம் ஹித்வா ஸ்வதர்மம் அவ தத: யுத்தம் செய்யாததால் மேற்சொன்னபடி இஷ்ட நிவிருத்தி அநிஷ்ட ப்ராப்தி ஏற்படுவதன் நிமித்தம் யுத்தத்தினின்றும் விலகுவதாகிய பாப கர்மாவை விட்டு ஸ்வதர்மத்தை ஸம்ரக்ஷணம் செய். தத: அதனால் கீர்த்திம் ஆப்ஸ்யஸி கீர்த்தியை அடைவாய். அவாப்ஸ்யஸி என்னும் வார்த்தையை அவ ஆப்ஸ்யஸி என்று இரண்டு பதங்களாய்ப்

பிரித்து ஸ்வதர்மம் கீர்த்திம் என்றும் இரண்டு பதங்களுடன் சேர்த்தால் இந்தப் பொருள் ஏற்படும்.

अकीर्तिंचापि भूतानि कथयिष्यन्ति तेऽव्ययाम् ।
संभावितस्य कीर्तिर्मरणादतिरिच्यते ॥ ३४ ॥

34 அகீர்த்திம் சாபி பூதானி கதயிஷ்யந்தி தேவ்யயாம் ।
ஸம்பாவிதஸ்ய சா கீர்த்திர் மரணாததிரிச்யதே ॥

ச மற்றும் அகீர்த்திம் அபகீர்த்தியையும் அவப்பெயரையும் அவாப்ஸ்யஸி அடைவாய். பூதானி பிராணிகள் அவ்யயாம் அழியாதிருக்கும் அகீர்த்திம் அந்த அபகீர்த்தியை தே உன் பொருட்டு கதயிஷ்யந்தி அபி சொல்வார்கள்கூட. ஸம்பாவிதஸ்ய உலகில் பலர்களால் மதிப்புப் பெற்றிருக்கும் புருஷனுக்கு அகீர்த்தி: ச அபகீர்த்தி என்பதோ மரணாத் மரணத்தைவிட 'அதிரிச்யதே மேலிட்டு நிற்கும்.

அர்ஜுனன்; கிருஷ்ணா! பிந்திய சுலோகத்தில் சுகத்தையும் கீர்த்தியையும் அடையாமல் பாபத்திற்குக் காரணமான துக்கத்தை நான் யுத்தம் செய்யாவிடில் அடைவாய் என்று சொன்னீர். இவைகள் வேண்டுமென்று எனக்கு ஆசையில்லை. பாபம் என்பது வெகு நாள் கழித்து பரலோகத்தில்தான் என்னை பாதிக்கும். ஆகவே இந்த லோகத்தில் பாதகமொன்றுமில்லையே. அப்படியானால் நான் ஏன் யுத்தம் செய்யவேண்டும்.

கிருஷ்ணன்: அகீர்த்திம் ச அவாப்ஸ்யஸி கீர்த்தியும் சுகமும் இல்லாமல் போவதோடு அபகீர்த்தியையும், நீ யுத்தம் செய்யாமல் போனால், அடைவாய். ஜனங்களில் அவப்பெயர் என்பது இந்த லோகத்தில் பாதகமே ஆகும். அவப்பெயர் வாட்டுமே, அதை யார் அறியப்போகிறார்கள், அதைப்பற்றி யார்தான் பேசப்போகிறார்கள் என்று கேட்பாயோ, குலகோத்திரம், பெயர் தெரியாதவனாயிருந்தால் அவனுக்கு ஏற்படும் கீர்த்தியையோ அபகீர்த்தியையோ ஒருவரும் அறியமாட்டார்கள், அறிந்தாலும் சொல்லமாட்டார்கள்.

த்வைத வேதாந்த பால சிக்ஷை

பெரிய பாடம்.

ஸத்குருவின் மஹிமை

(முன் 134ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

யதிப்ரணவ கல்பம்

16 ஏவமுக்த்வா துருர்த்யானம் சபதம் காரயேத் தத: |
விஷ்ணும் வைஷ்ணவான் சைவ விஸ்ருஜேய மிதித்ருச: ||

மேலே சொன்னபடி ஸ்ரீ விஷ்ணுவினுடைய ரூபத்தை த்யானம் செய்யும் ப்ராகாரத்தை குரு தன் சிஷ்யனுக்கு உபதேசம் செய்துவிட்டு, விஷ்ணுவையும் விஷ்ணு பக்தர்களான வைஷ்ணவர்களையும் ஒரு போதும் நான் கைவிட மாட்டேன் என்று மூன்று தரம் ஸத்யம் செய்து கொடுக்கச் செய்யவேண்டும்.

17 ந சான்ய தேவதா ஸாம்யம் ததைக்ய மதவா ஹரே: |
சிந்தயேயம் ம்ருதோ வாபி ந சாப்யேகத்வவாதிபி: ||

18 ஸமத்வ வாதிபிர்வாஹம் ஸங்கச்சேயம் கதாசன |
தன் நிந்தைகஸ்ச தத் பக்த நிந்தகைர்வா மஹாமுனே ||

விஷ்ணு பிரம்மாதி எந்த ஜீவர்களுடனும் எல்லா வகையிலும் சமமானவர் என்றும், எந்த ஜீவர்களுடனும் அபேதமுள்ளவர் என்றும், நான் ஒருபோதும் என்னை ஒருவர் கொல்வதாய் இருந்து என் பிராணன் போகும் சமயமாய் இருந்தாலும் நினைக்கமாட்டேன். ஜீவனும் ஈசுவரனும் ஒன்று என்று சொல்பவர்களுடனாவது, ப்ரம்மாதி ஜீவர்களும் விஷ்ணுவும் ஸமமானவர்கள் என்று சொல்பவர்களுடனாவது, விஷ்ணுவை நிந்தனை செய்பவர்களுடனாவது, விஷ்ணு பக்தர்களை நிந்தனை செய்பவர்களுடனாவது, என் பிராணன் போவதாயிருந்தாலும், சேர்ந்து உட்காருவதோ, சாப்பிடுவதோ முதலானவைகளைச் செய்து

நன்கு கலந்து கொள்ளமாட்டேன். என்று ப்ரதிக்ஞையை மகா முனியான சிஷ்யா! செய், என்று குரு சிஷ்யனிடமிருந்து இந்த ப்ரதிக்ஞையை வாங்கவேண்டும்.

19 ஏவம் க்ருதே து சபதே மஸ்தகே ஹஸ்தபங்கஜம் |
நிதாய உத்தீர்ய ஸம்ஸாராத் ஸுகீபவ ஹரே: ப்ரிய: ||

குரு தன்னையும் ஸ்ரீ ஹரியையும் சரணமடைந்த சிஷ்யன் மேற்கண்டபடி தான் சொன்ன ப்ரதிக்ஞையைச் செய்துவிட்ட பின், சிஷ்யனுடைய உச்சித்தலையில் தன்னுடைய கைத்தாமரையை வைத்து, அடியிற் கண்டவாறு சொல்லவேண்டும். இந்த ஸம்ஸாரத்தினின்றும் கரைகடந்தவனாய் ஆகி சுகசாலியாய் ஆகு. ஸ்ரீ ஹரிக்கு ப்ரியனாய் ஆகு. சரணாகதி என்றால் "ரக்ஷதீ த்யேவ விசுவாஸ: ததீயோ ஹமிதி ஸ்ம்ருதி: | சரணாகதி ரேஷாஸ்யாத் விஷ்ணௌ மோக்ஷ பலப்ரதா" இவர் கட்டாயம் என்னை ஸம்ரக்ஷிப்பார் என்றும் நான் இவரைச் சேர்ந்தவன் என்றும் திடமான நம்பிக்கை பகவானிடம் கொள்ளுதல் ஆகும்.

20 ஸர்வ துக்காதிபிர் முக்தோ நித்யா நந்தைக ரூபக: |
ஸம்ப்ராப்ய விஷ்ணுஸாமீப்யம் தத்ராபி ஹரிபக்திமான் ||

ஆத்யாத்மிகம், ஆதிதெய்வகம், ஆதி பௌதிகம் ஆகிய துக்கங்களும், அக்ஞானாதி தோஷங்களும் இல்லாமற் போகட்டும். நித்யானந்தம் மட்டில் கொண்ட சரீரமுள்ளவனாய் ஆகு. பிரம்மக்ஞானமடைந்தவனாய் விஷ்ணுவின் ஸமீபமான மோக்ஷத்திற்குச் சென்று அங்கும் ஹரி பக்தியைக் கொண்டவனாய் ஆகு.

21 பக்திமான்ச அன்யதேவேஷு தாரதம்யம் ச ஸம்ஸ்மரன் |
ஸர்வோத்கர்ஷம் ஸ்மரன் விஷ்ணோ: பூயாஸ்ஸைவ ஸதாஸுகீ ||

ரமா பிரம்மா முதலான இதர தேவர்களிடத்தில், அவர்களில் இன்னார் உத்தமர், அவரை விட இன்னார் அதமர் என்ற தாரதம்மியத்தை இந்த சம்சார தசையிலும் சரியே, முக்தியிலேயும் சரியே அறிந்து அவர்களிடம் பக்தியைக் கொண்டவனாய் ஸமஸ்தமான தேவர்களைவிட விஷ்ணுவுக்குத்தான் ஸர்வோத்தமத்வம் இருப்பதாய் ஸ்மரித்துக்கொண்டு எப்போதும் சுகமாய் இரு.

22 ந முக்தௌ விஷ்ணு நைக்யம் வா முக்தானாம் ஸாம்யமேவ வா ।
ஸ்மரேதா இதி சோக்த்வாத ஸமயான் அனுசிக்ஷயேத் ॥

முக்தியில் ஜீவர்களுக்கு விஷ்ணுவுடன் ஐக்யம் ஏற்படுவதாகவோ, முக்தர்களில் தாரதம்யம் இல்லை என்றோ விஷ்ணுவுக்கு ஜீவர்கள் ஸர்வஸாம்யமடைகின்றனர் என்றோ, மனதில் சிறிதும் எண்ணிவிடாதே. என்றிவ்வாறெல்லாம் ப்ரமேயங்களை உபதேசித்து, பிறகு சிஷ்யன் செய்யவேண்டிய கர்மாக்களை சிஷ்யன் சௌகரியமாய் எப்படிச் செய்யமுடியுமோ அந்த ரீதியில் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

23 நித்யசஸ்ச ஹரே: பூஜா ஜபத்யான ஸமர்ப்பணம் ।
கர்த்தவ்யம் து த்வயா வத்ஸ ஜபஸ்ச த்ரிஸஹஸ்ரக: ॥

24 மத்யம: ப்ரணவ ஸ்யோக்த: யோவரஸ் ஸஹஸ்ரக: ।
த்ரிஸஹஸ்ரக: பரோயஸ்து ஸ உத்தம ஜப: ஸ்ம்ருத: ॥

வத்ஸனான சிஷ்யா! நீ செய்யும் விஷ்ணு பூஜை என்ன, விஷ்ணுவின் த்யானம் என்ன, இவைகளை ஒவ்வொரு காலத்திலும் ஸ்ரீ ஹரியிடம் ஸமர்ப்பணம் செய்யவேண்டும். பகவான் நாராயணனை ப்ரகர்ஷமாய் உத்தம ரீதியில் ஸ்தோத்திரம் செய்வதால் ப்ரணவம் எனப்படும் ஓம்காரத்தை மூவாயிரம் தடவை ஜபம் செய்வது மத்யமம் ஆகும். ஆயிரம் தடவை ஜபம் செய்வது அதமம் ஆகும். மூவாயிரத்துக்கு மேல் நாலாயிரம், ஐயாயிரம், ஆறாயிரம் எண்ணிக்கை கொண்ட ஜபம் உத்தமமான ஜபம் என்று ஸ்ரீ வேதவ்யாஸரால் சொல்லப்பட்டிருக்கிறது.

25 ஆத்மானம் ப்ரதி பிம்பத்வே த்யாயன் பிம்பம் ஜனார்த்தனம் ।
த்யாயஸ்வ ஸததம் வத்ஸ ஸபர்யாம் நித்யச: குரு ॥

சிஷ்யா! உன் ஜீவ ஸ்வரூபத்தை ப்ரதிபிம்பமாகவும் உள்ளே இருக்கும் பகவானை பிம்பமாகவும் அதாவது உன் ஜீவன் ஈசுவரனுக்கு அதீனனாய் இருந்து, அவனைப் போலொத்தவனாய் இருப்பதாயும் சிந்தனை செய்து, ஜீவன் அஸ்வதந்திரன் ஈசுவரன்தான் ஸ்வதந்திரன் என்றும், எப்போதும் அவிச்சன்னமாய் த்யானம் செய். மிக்க அசக்யமான நித்ராதி காலங்களில் தவிர ஸாத்யமான எல்லா காலங்களிலேயும் பகவத் [illegible] செய்.

26 மானஸைர்வாத புஷ்பைர்வா ப்ரணவேன ஸமாஹித: I
அன்யாம்ஸ்ச வைஷ்ணவான் மந்த்ரான் ஜபதோ பக்திபூர்வகம் II

எப்போதுமே பகவத் பூஜையைச் செய் என்றால் பூஜைக்கு வேண்டிய ஸாதன ஸாமக்ரிகள் அகப்படாதே என்றால், ஏகாக்ர சித்தனாய் பகவானிடமே ஈடுபட்ட மனமுள்ளவனாய் மானஸமான புஷ்பங்களாலோ ப்ரணவமாகிய ஓம்காரத்தாலோ பூஜையைச் செய். "மன: ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌனம் ஆத்ம விநிக்ரஹ:। பாவஸம் சுத்தி: இத்யேதத் தபோ மானஸம் உச்யதே" என்று பகவத் கீதையில் சொன்னபடி மனம் தெளிவாய் இருத்தல், க்ரூரனாய் இல்லாமல் இருத்தல், மனனம் செய்தல், பகவானிடம் மனம் அதிகமாய் நின்றிருத்தல், மனதில் பலவகை காமனைகள் இல்லாதிருத்தல் இவைகள் மானஸ புஷ்பங்கள் ஆகும். 'அஷ்டாபிர் பாவ புஷ்பாபி:' அஹிம்ஸை, இந்திரியநிக்ரஹம், ஸர்வபூததயை, க்ஷமை, க்ஞானம், தபஸ், த்யானம், ஸத்யம் ஆகிய எட்டும் பாவ புஷ்பங்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளைக்கொண்டு பகவானை மகிழச் செய்யவேண்டும் என்று பொருள்படும். அல்லது ஓம் ஓம் என்று சொல்லிக்கொண்டே அதன் அர்த்தானு ஸந்தானு பூர்வமாய் பகவானை ஆராதிக்கலாம். இந்த ப்ரணவ மந்திரத்தைத் தவிர இதர வைஷ்ணவ மந்திரங்களாகிய நரஸிம்ஹாதி மந்திரங்களை பக்தி பூர்வமாய் ஜபம் செய்.

27 ச்ருணுஷ்வ வைஷ்ணவம் சாஸ்த்ரம் ஸதா வேதார்த்த தத்பர: I
வேதான் மந்த்ரானுபநிஷத் ஸஹிதான் ஸர்வதா ச்ருணு II

வேதத்தால் முக்யமாய்ச் சொல்லப்படுவது விஷ்ணுதான் ஸர்வோத்தமர் என்பதே என்று அபிப்பிராயங் கொண்டு வைஷ்ணவமான சாஸ்திரங்களை குரு முகமாய் எப்போதும் சிரவணம் செய். அப்படியே வேதங்களில் பிராம்மண பாகத்தையும் அப்படியே உபநிஷத் பாகத்தையும் மந்திர பாகத்தையும் எப்போதும் குருமுகமாய் சிரவணம் செய்.

28 இதிஹாஸ புராணம்ச பஞ்சராத்ரம் ததைவச I
ததர்த்தான் ப்ரம்மஸூத்ராஸ்ச ஸம்யக் நிர்ணீய தத்வத: I
விஷ்ணோ: ஸர்வோத்தமத்வம் ச ஸர்வதா ப்ரதிபாதய II

மகாபாரதம் பாகவதம் முதலிய பதினெட்டு புராணங்களை யும் நாராயணரால் செய்யப்பட்டதான வேதத்திற்கு வ்யக்ரன மாயுள்ள பாஞ்சராத்ர ஆகமத்தையும் சிரவணம் செய். இதனுல் சிரவணம் அவசியமென்பது சொல்லப்பட்டது. சிரவணம் செய்யப்பட மேற்கண்ட வைஷ்ணவ சாஸ்திரங்களின் அர்த்தங் களை உபக்ரமம், உபஸம்ஹாரம், அப்யாஸம், அபூர்வதை, பலம் அர்த்தவாதம், உபபத்தி, இவைகளைக் கொண்டும் பிரம்ம சூத்தி ரங்களைக் கொண்டும் விசாரம் செய்து, இவைகளின் தத்வார்த் தை நிர்ணயம் செய்து விஷ்ணுவான நாராயணர்தான் மகாலட் சுமி, பிரம்மா சிவன் முதலான ஸமஸ்த தேவர்களுக்கும் உத்த மர் என்றும், மகாலட்சுமி முதலான எல்லோருமே அவருக்கு குறைந்தவர் என்றும், பக்த ஜனங்களுக்கு இந்த சாஸ்திரார்த் தங்களை எடுத்துச் சொல், என்று இவ்வாறு சிஷ்யனுக்கு குரு உபதேசிக்க வேண்டும்.

இதி ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த பகவத் பாதாசார்ய விரசிதோ
யதிப்ரணவ கல்ப: ஸம்பூர்ண:
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீமத்வ விஜயம்

15-வது ஸர்க்கம்

(முன் 129ம் பக்கம் தொடர்ச்சி)

100 இந்திரிய நிக்ரஹம் என்ன, பக்தி என்ன, நல்ல பேச் சென்ன, அன்புள்ள மனம் என்ன, குரு சுச்ரூஷை என்ன இவை முதலான குணங்களாகிய எருக்களால் ஸ்ரீ விஷ்ணுதீர்த் தர் அவரிடம் அவருடைய குருவான ஸ்ரீ மத்வாசாரியார் வைத் திருக்கும் கிருபையாகிய சிறு முளையை பெரிய மரமாக வளர்ந்து விடச்செய்தார். 101 அபரிமிதமான புத்தி கொண்டு பூர்ண

ப்ரக்ஞரான ஸ்ரீமத்வாசாரியாரின் காருண்யமாகிய கல்ப விருக்ஷத்தைக்கொண்டவரான ஸ்ரீ விஷ்ணுதீர்த்தருடைய ஜனங்களால் வர்ணிக்க முடியாததான மகாத்மியத்தை ஏதோ ஸ்வல்பமாய் ஆசையின்மேரில் சொல்லுகிறேன். 102 இந்த ஸ்ரீ விஷ்ணுதீர்த்தா ஸ்ரீ மத்வ சாஸ்திரத்தை எடுத்துச் சொல்வதில் மிகவும் ஸமர்த்தர். ஸ்ரீமத்வாசாரியாரால் தந்திரஸாரத்தில் உத்தரிக்கப்பட்டுள்ள ப்ரணவாதி மகா மந்திரங்களை ஜபம் செய்து அவைகளின் சித்தி பெற்று மகா மகிமை வாய்ந்தவர். மேலும் ஸ்ரீமத்வாசாரியாரை ஸேவை செய்யும் அவருடைய சிஷ்ய கோடிகளில் இவர் இரண்டாவது ஆவார், இவர் மூன்றாவது ஆவார் என்று தன்னை விரல்விட்டு எண்ணும்படி சொல்லக்கூடாது என்று தன்னை எல்லோரையும் விட முதலாவதாகச் செய்துகொண்டார். 103 சந்திரனுடைய திக்காகிய வடதிசைக்கு பாரத பூமியில் தீர்த்த யாத்திரைக்குச் சென்ற ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரை கங்காதி புண்ய நதிகள் பவித்ரமாக்கின. பரமபாகவதரான ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் ஸ்நானம் செய்ததால் கங்காதி புண்ய நதிகளும் பவித்ரமாயின. 104 காம்யமான கர்மாக்களை அனுஷ்டானம் செய்யாதிருக்கும் அநேக தபஸ்விகளின் தபஸ் பலனடையும் சித்த பூமியான ஹரிச்சந்திர பர்வதத்திற்கு தன் யோக சக்தியால் அந்தர்த்தானமடைந்த சரீரமுடையவராய் தவம் செய்யச் சென்றார். 105 ஆரம்பித்த காரியத்தை முடிப்பவரான இந்த ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் நற்காரியங்களில் துவேஷமாகிய மாச்சரியமில்லாதவராயினும், சீதம் உஷ்ணம், முதலான த்வந்தங்களால் ஏற்படும் துக்கமாகிய அக்னியில், போஜனம் செய்தல், பானம் செய்தல் முதலானவைகள் அந்த அக்னியை அபிவிருத்தி செய்யும் அதற்கு காஷ்டம் போன்றவைகள் என்று எண்ணி, அந்த போஜனாதிகளில் துவேஷம் அடைந்து அவைகளை அறவே ஒழித்தார். 106 யதி சேகரரான அந்த விஷ்ணுதீர்த்தர் அவருடைய பக்தர்கள் பிரார்த்தித்து அந்த மலையின் அருகில் கொணரும் பஞ்சகவ்யத்தை ஐந்து நாளுக்கொரு தடவை கொஞ்சம் கொஞ்சமாக பானம் செய்தார். 107 சரீரம் இந்திரியாதிகள் இவைகளின் நிக்ரஹமுள்ள அந்த விஷ்ணுதீர்த்

தர் அந்த பஞ்சகவ்ய ப்ராசானத்தையும் விட்டுவிட்டு, பூமியில் உதிர்ந்த பழுத்த பில்வத் தழைகளையும் ஜலத்தையும் உட்கொண்டு அதனால் திருப்தி அடைந்து குரூரமான தபஸ்விகளையும் மீறிய தபஸ்ஸைச் செய்துவந்தார். 108 மனோ நிக்ரஹமுள்ளவரும் ஸன்யாஸிகளுக்கு விஹிதமான கர்மாக்களின் அனுஷ்டானமுள்ளவருமான அந்த விஷ்ணுதீர்த்தர், தெய்வானுக்ரஹமில்லாதவர்களான தபஸ்விகள் ஒருநாள்கூட எதன்மேலில் உட்கார்ந்திருக்க முடியாதோ அப்பேர்ப்பட்ட பரம சீதளமான ஓர் பாறையின்மீது அவர் இஷ்டப்படி வெகு காலம் உட்கார்ந்து தவத்தில் அமர்ந்திருந்தார். 109 வேறிடம் செல்லும் குதிரைகளை ஒருவன் தன் ஸாரதியைக் கொண்டு இழுத்து தன் ஸ்வாதீனமாக எப்படி திருப்பிக்கொள்வானோ, அம்மாதிரியே வாயு பகவானின் அவதாரமான ஸ்ரீமத்வாசாரியாரின் ஸஹோதரரான ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர், ரேசகம், பூரகம், கும்பகம் ஆகிய மூவகை ப்ராணாயாமங்களால் சுவாச வாயுவை தன் வசமாக்கிக் கொண்டு, கண், காது முதலிய இந்திரியங்களாகிய குதிரைகளை ரூபம், சப்தம், முதலான விஷயங்களினின்றும், புத்தியாகிய ஸாரதியைக்கொண்டு திருப்பினார். 110 அத்யாத்ம விஷயத்தில் ஸமர்த்தரான, அதாவது பரமாத்மாவின் சம்பந்தமான வேதாந்த சாஸ்திரத்தில் மிகவும் பண்டிதரான அந்த விஷ்ணுதீர்த்தர், குரு உபதேசித்த மார்க்கத்தின்படி ஸ்ரீ விஷ்ணுவின் ரூபத்தை தன் ஹ்ருதயத்தில் அனுஸந்தித்து த்யானம் செய்துவந்தார். பகவானிடம் மனோயோகத்தால் மட்டில் ஏற்படக் கூடியதாயும், மனோ துக்கங்களை எல்லாம் போக்கக்கூடியதாயுமுள்ள சமாதி நிலையை அதாவது அனாயாஸமாய் பகவானிடம் போய்ச் சேரும் நிரந்தரமாய் மனம் ஈடுபடுதலாகிய நிலையை அடைந்தார். 111 அழகு வாய்ந்தவைகளாயும் தோஷமற்றவைகளாயுமுள்ள ஆனந்தம், க்ஞானம் முதலான எண்ணிறைந்த குணங்களுக்குக் கடல் போன்றதும்; ஆச்சரியமான வஸ்துக்களிலேயும் சிரேஷ்டமானதும், வெகு சுந்தரமானதுமான ஸ்ரீ நாராயணனின் காசாணுதி அவயவங்கள் உள்ள திவ்யமங்கள விக்ரஹத்தில் ஈடுபட்டுப்போன மனமுள்ள இந்த விஷ்ணுதீர்த்தர்

அந்த பகவத் ரூபத்தைத் தவிற ஜகத்திலுள்ள வேறு எந்த வஸ்துவையும் காணாமல் அஸம்ப்ரக்ஞாத ஸமாதியிலேயே அமர்ந்திருந்தார். 112 த்ராஸமென்னும் தோஷமில்லாததாயும் மிகவும் பிரகாசமாயுள்ள ஓர் உயர்ந்த ரத்னத்திற்கு ஸாம்ராஜ்யத் தவிற வேறு இடத்தில் எப்படி விலையாகாதோ அவ்வாறு பலத்தின் இச்சையில் அவா என்னும் தோஷமில்லாதவராயும், அபரோக்ஷ க்ஞானக் கண் படைத்தவராயுமுள்ள யோகி ரத்னமாகிய அந்த விஷ்ணுதீர்த்தருக்கு மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைத் தவிற வேறு விலை இல்லை. 113 ஸ்ரீமத்வாசாரியாரின் தம்பியான ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரிடத்தில் ஸ்ரீமத்வநாதரான நாராயணர் எவ்வகை அனுக்ரஹத்தைப் புரிந்தார் என்பது மனதிற்கு ஸம்பூர்ணமாய் எட்ட முடியாததாய் இருந்ததாலும் இதரர்கள் அதை அறிய அனர்ஹர்களாய் பரம ரகசியமாய் இருப்பதாலும் நான் அதை விஸ்தாரமாய் இங்கு வர்ணிப்பதில்லை. 114 பூர்ண போதரான ஸ்ரீமத்வாசாரியாருக்கு கைங்கர்யம்செய்தாலேற்படும்மகிமையை என்னவென்று சொல்வது! ஆச்சரியமே! இந்த கலியுகத்திலேயே இந்த விஷ்ணுதீர்த்தர் இப்பேர்ப்பட்ட யோக சித்தியை அடைந்தாரே என்று தேவர்களால் ஸ்ரீமத்வாசாரியாரின் மகாமகிமை கொண்டாடப்பட்டது. 115 இதரர்களால் செய்ய முடியாததான விரதானுஷ்டானமுள்ளவரும் இந்திரியங்களுக்கு எட்டாததான சமாசாரங்களை அறியும் த்ரிகால ஞானியும், வித்தைகளுக்குக் கடலரும், தர்க்க சாஸ்திரத்தில் பண்டிதரும், மிகவும் ப்ரியரும் ஸிஷ்யருமான அநிருத்த தீர்த்தர் என்ற பெயர் கொண்டவர் ஹரிச்சந்திர மலையிலிருக்கும் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரிடம் வந்துசேர்ந்தார். 116 அந்த ஸ்ரீ அநிருத்த தீர்த்தரால் பிரார்த்திக்கப்பட்டு உடுபிக்கு வந்துசேர்ந்த விஷ்ணுதீர்த்தரைப் பார்த்து, ஸ்ரீமத்வாசாரியார் தான் அவர்களிடம் கருணை வைத்தும் மறுபடியும் அங்கு வந்திருப்பதாய், விஷ்ணுதீர்த்தரும் ஸ்ரீமத்வாசாரியாரைப் போலவே ரூபாதிகளைக் கொண்டதின் நிமித்தம் எண்ணினார்கள். 117 காவ்யங்களை இயற்றும் கவீசுவரர்களில் ச்ரேஷ்டரும், பண்டித சேகரரும், தபஸ்விகளில் ச்ரேஷ்டரும் ஸ்ரீமத்வாசாரியாருக்கு விளையாட்டுக் கிளிபோல்

அத்யந்தம் அந்தரங்கம் நண்பருமான பாதராயண தீர்த்தர் என்பவர் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தருக்கு சிஷ்யரானார். 118 ஸ்ரீ விஷ்ணு தீர்த்தருக்கு சிஷ்யராய் வந்த ஸ்ரீ பாதராயண தீர்த்தரை தம்முடைய சாமர்த்தியங்களால் ஜனங்களை ஆச்சரியப்படச் செய்து மகான்களிலும் மகானாய் இருக்க பரமானுக்ரஹம் செய்தார். 119 இவ்வாறு ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் இதரர்கள் அடையமுடியாததான மகத்தான மகத்வத்தை அடைந்து ஸ்ரீ ஹரியின் ப்ரீதியை சம்பாதித்துத்தரும் தபஸ்ஸைச் செய்ய இதரர்களால் போக முடியாததான ஸஹ்ய மலையின் சிகரமாயுமுள்ள குமார பர்வதத்தை ஏறிச்சென்றார்.

(தொடரும்)

ஸ்ரீ ஜகந்நாததாஸர் இயற்றிய

ஹரிகதாம்ருத ஸாரம்

12-வது நாடீ ப்ரகரண ஸந்தி.

(முன் 117ம் பக்கம் தொடர்ச்சி)

19. வனத்திலும் கிராமத்திலும் வாஸம் செய்யும் எல்லா ப்ராணிகளும் ஒவ்வொரு நாளும் எந்தெந்த காரியங்களைச் செய்கின்றனவோ அந்த எல்லா காரியங்களும் ஸ்ரீ ஹரியின் பூஜை என்று அறிந்து ஸத்பக்தியுடன் வாயுபகவான் முதலான தேவர்களின் அந்தர்யாமியான ஸ்ரீநிவாஸனுக்கு ஸமர்ப்பணம் செய்து அதனால் ஸந்தோஷப்பட்டுக்கொண்டு அந்த பக்தர்கள் நர்த்தனாதிகளைச்செய்வார்கள். 20. சிறுவனல்லாதவனாயும் உலகில் நாய் பன்றி முதலானவைகளில் அந்தர்யாமியாயும் இருந்துகொண்டு "ஏகமேவா த்விதீயம்" என்று ஸர்வோத்தமனாயும் ஸ்வதந்திரனாயுமிருந்து கொண்டு மத்ஸ்ய கூர்மாதி அநேக ரூபங்களைத் தரித்து, அநேக நாமாக்களால் அழைக்கப்பெற்றவராய், எல்லா ப்ராணிகளின் உள்ளேயும் இருந்து, இருப்பதாய் வெளிக்காட்டிக்கொடுக்காமல், மகாலக்ஷ்மி என்ன, கமலபவனான சதுர்முகன் என்ன இவர்கள்

முதலான எல்லா தேவர்களின் சமூகத்தால் ஆராதிக்கப்பட்டவராய், ஸேவையைப்பெற்று ஒவ்வொரு நாளும் ஸம்பக்ஷிப்பார். 21. என்றிவ்வாறு உபாஸனை செய்யும் ஸஜ்ஜனங்கள் ஒவ்வொரு நாளிலும் என்ன என்ன காரியங்களைச் செய்தாலும் அவைகள் எல்லாம் ஸ்ரீ ஹரிபூஜை என்றெண்ணுவார்கள். இந்த வார்த்தை ஸத்யமே இந்த வார்த்தையில் சம்சயப்படுபவர் அல்பமான ஜனமே ஆவார். அவர் பாஹ்யகர்மாக்கள் எதைச் செய்தால்தான் என்ன பலன்? 22. போக்யமான அதாவது அனுபவிக்க லாயக்கான வஸ்துக்கள் என்ன, போக்தா அதாவது அதை அனுபவிக்கும் ஜனங்கள் என்ன, இவர்களில் ஸ்ரீ ஹரிதான் இருந்து போக்யம் போக்தா என்று அழைக்கப்பெற்றவராய், போக்யமான வஸ்துக்கள், போக்யமில்லாததான வஸ்துக்கள் இவைகளிலுள்ள ரஸங்களை முறையே தேவர்களின் கணத்துக்கும் அஸுரர்களின் கணத்துக்கும் தனித்தனியாக உண்ணவைப்பார். பக்தி வைராக்ய பாக்யமுள்ள பக்தர்களுக்கு நிதியைப்போல் இருந்து வரும் பகவான், வைராக்யம், பக்தி, க்ஞானம் இவைகளைக் கொடுப்பார். அயோக்யர்களுக்குத் தன்னிடம் துவேஷம் முதலானவைகளைக் கொடுப்பார். 23. இந்த பதினான்கு லோகங்களிலுள்ள ஸகல ஸ்தாவர ஜங்கம ஸ்வரூபமான ஜீவர்களில் விரோசனின் பிள்ளையான பலிசக்ரவர்த்தியின் வஞ்சகனான வாமன மூர்த்தி பகவான் இருந்துகொண்டு, ஒவ்வொரு நாளும் யாசகன் என்று அழைக்கப்பெறுவார். கானல் ஜலம் போன்ற ஸம்ஸாரத்தை நாசமாக்குபவரானதால் மரீசிதமனன் என்றும், துக்கத்தை நாசம் செய்பவரானதால் ஹம்ஸன் என்றும், பக்தர்களின் அபீஷ்டத்தை வர்ஷிப்பவரானதால் நிஷேசகன் என்றும், அழைக்கப்பெற்றவராய் ஜனங்களுக்கு அவரவர்களின் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்விப்பார். 24. அன்னத்தை இதாருக்குத் தருபவர், அன்னத்தை ஜனங்களிலிருந்து புஜிப்பவர், அன்னமயன்—எல்லா ப்ராணிகளுக்கும் அன்னமாய் இருப்பவர், அன்னன்—அன்னம் என்ற வார்த்தையால் சுவயம் சொல்லப்படுபவர், ப்ரம்மாதி ஸமஸ்த சேதனர்களுக்கும் அன்னத்தை ஏற்படுத்துபவர், இவ்வாறு ஐந்து வகையான காரியங்களை அநிருத்

தன், ப்ரத்யும்னன், ஸங்கர்ஷணன், வாஸுதேவன், நாராயணன் என்னும் ஐந்து ரூபங்களால் செய்கிறார். ஆனந்தாதி குணங்கள் என்ன, காருண்யம் என்ன, இவைகளுக்குக் கடல் போன்ற அந்த பகவான் ஹிரண்யகர்பரான சதுர்முகனிடம் இருந்து இதராள் அபேக்ஷிக்காமல் மூவுலகத்தையும் சிருஷ்டிக்கிறார். விஷ்ணுவிடம் இருந்து ஸம்ரக்ஷிக்கிறார்; ருத்திரனிடம் இருந்து ஸம்ஹரிக்கிறார். ப்ராக்ருத குணங்கள் பகவானுக்கு இல்லாதிருப்பினும் சிருஷ்ட்யாதிகளுக்காக குணங்களை அவர் ஸ்வீகரிப்பதால் அவர் குணர் என்றே சொல்லப்படுவார். ரஜோகுணத்தை ஸ்வீகரித்து சிருஷ்டிக்கிறார்; ஸத்வகுணத்தை ஸ்வீகரித்து ஸம்ரக்ஷிக்கிறார்; தமோகுணத்தை ஸ்வீகரித்து ஸம்ஹரிக்கிறார். 25. மூன்று பாதமுள்ள த்ரிபதா எனப்படும் காயத்ரியால் சொல்லப்படுபவர். த்ரிதசரான தேவர்களுக்கு அதிபதி. சுவேதத்வீபம், அநந்தாஸனம், வைகுண்டம் என்னும் மூன்று ஸ்தனங்களில் இருப்பவர், மூன்று மார்க்கமாய் ப்ரவஹிப்பவளாதலால் த்ரிபதகா எனப்படும் கங்கைக்கு தந்தை: மூன்று அடியால் உலகத்தை அளந்தவரானதால் த்ரிவிக்ரமர். எளியவர்களிடம் வாத்ஸல்யமுடையவர். நீலோத்பல புஷ்பத்தின் இதழ்போல் ச்யாமளவர்ணர். எங்கும் இல்லாத பலம் முதலியவைகளைக் கொண்டவர். அபரிமிதமான சாச்வதமாயுள்ள ஸுகஸ்வரூபன். ஆனந்தாதி குணங்களைச் சரீரமாகக் கொண்டவன். வைகுண்டம் முதலான மூன்று லோகங்களுக்கு அதிபதி. வேத ப்ரதிபாத்யன். இப்பேர்ப்பட்ட பகவான் தன் பக்தஜனங்களைக் கபடமில்லாமல் அனுகுவார். 26. உப்பு கலந்த ஜலம் உப்பைப்போலவே நாவுக்குத்தோன்றும். நேரில் பார்ப்பவர்களுக்கு உப்பு வேறு ஜலம் வேறு என்று பிரித்துக் காட்டமுடியுமா என்ன? லக்ஷ்மீபதியான பகவான் ஸ்வதந்திரமாய் வியாபிப்பவர் எனச் சொல்லப்பட்டவராய், அவருடைய வசமாயுள்ள ஸ்தாவர ஜங்கமாத்மகமான ப்ரபஞ்சத்தில் நிறைந்திருக்க, அவருடைய சொரூபம் இவ்வாறுதான் இருக்கிறதென்று இதராளுக்குக் காட்டிக்கொடாதிருக்கும் அவரை தேவர்களில் ஸம்பூர்ணமாய் அறிந்தவர் யார்தான் உண்டு. 27. சிதானந்த ஸ்வரூபனான பகவான் மற்றொருவரால் வியாபிக்கப்பட்டு இருப்பவர்போல் ஸமஸ்த ஜீவர்களிலேயும் இருக்கிறார். கோரமான ஸம்ஸாரத்தில் சங்கடப்பட்டுவரும் பக்தர்கள் பக்தியுடன்

அவரை பஜனம் செய்தால் அவர் இஹலோகத்திலேயு பரலோகத்திலேயும் அடைய அருகராவார். அவர்களின் துர்குணங்களை பக்தவத்ஸலனான அந்த பகவான் ஏற்றுக்கொள்வார். தன்னை பஜனை செய்யும் அந்த பக்தர்களுக்கு சாசுவதமாய் ஜனனம் முதலான சங்கடங்களை தப்புவிப்பார். 28. அந்த பக்தர்கள் பலவகையாய் தம் மனதில் ஸ்ரீ ஹரியை ப்ரஸன்னமாகும்படி செய்து அங்கேயே நிலைநிற்கச்செய்து அவர்கள் எந்தக்காரியத்தைச் செய்தாலும் அவனுடைய பாதபூஜை என்று எண்ணுவார்கள். பலராமரின் சகோதரரான அந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அவரே சுயம் எல்லா இடங்களிலேயும் நிலைநின்று அந்த பக்தர்களுக்கு நிஸ்சலமான பக்தியையும் க்ஞானத்தையும் பாக்யத்தையும் கொடுத்து அவர்களை ஸம்ரக்ஷிப்பார். 29. தோஷத்தின் வாஸனையே இல்லாதவரும், எங்கும் வியாபகமாய் இருந்து மத்ஸ்யன், கூர்மன் முதலான நானாரூபங்களைத் தரிப்பவரும், இந்த மூன்று உலகத்திலுள்ள ப்ராணிகளைப் போஷிப்பவரும், அநாதிபுருஷரும், இந்திராதி தேவர்களால் நன்கு துதிக்கப்பட்டவரும், ஆதிசேஷனின் உடம்பாகிற உயர்ந்த மஞ்சத்தில் படுத்திருப்பவரும், விபீஷணனுக்கு ப்ரியரும், அர்ஜுனனுக்கு சிநேகிதருமான பகவான் ஸ்ரீ ஹரி ஸஜ்ஜனங்கள் விரும்பும் பொருள்களைப் பூராவாய் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்துவார். 30 ஸ்ரீதேவி, பூதேவி இவர்களால் ஸேவிக்கப்பட்ட பாதகமலமுள்ளவரே! குணபூர்ணனே ! சரியான பக்தர்களுக்கு மட்டில் கிடைக்கக் கூடியவனே ! பிதாமஹரான பிரம்மா முதற்கொண்டுள்ள தேவர்களாலும் வாயுபகவானாலும் பூஜிக்கப்பட்ட பாதகமலமுள்ளவரே ! சுந்தர சொரூபனே ! வாமனமூர்த்தியே ! ஹே ராமசந்திரா! ஸம்ஸாரமாகிய வியாதிக்கு ஔஷதமாய் இருப்பவரே ! ஹே பகவன் ! என் குலத்துக்கே ஸ்வாமி ! என்னை ஸம்ரக்ஷிப்பாய் என்று பக்தியுடன் சொன்னால் அந்த கருணாபூர்ணரான பகவான் வந்து உதவுவார். 31. தைத்யர்களிலேயும் தேவர்களிலேயும் இருந்து அவரவர்களை அனுஸரித்து கர்மாக்களைச் செய்வார். ஜனனம் மரணம் முதலான ஸமஸ்த தோஷங்களும் இல்லாத பகவான் நாம் பிறக்கும்பொழுது எம்முடனேயே பிறப்பார். நாம் ஜீவித்திருக்கையில் எங்களில் இருந்து வளர்ந்துவருவார். எல்லா காலத்திலேயும் புதையல் பணத்தைக் காக்கும் ஸர்ப்பம்போல் எக்காரணங்கொண்டும் இல்லாமல் எங்களுக்கு பந்துவான அந்த பகவான் எங்களை ஸம்ரக்ஷிப்பார்.

(தொடரும்)

குரு ஆபோத தௌம்யர்.

தௌம்யர் என்பவர் ஓர் மகான். அவருடைய தந்தை கேவலம் ஜலத்தை மட்டில் அருந்திக் கடுந்தவம் புரிந்தவர். அதனுல் அவர் ஆபோதர் எனப் பெயர் பெற்ருர். அவருடைய குமாரரானதால் இவர் ஆபோததௌம்யர் என்று அழைக்கப்பெற்ருர். இவரிடம் வித்யாப்யாஸம் செய்ய மூன்று சிஷ்யர்கள் உபமன்யு, ஆருணி, பைதர் என்றவர்கள் வந்துசேர்ந்தனர். குருவின் அனுக்ரஹத்தை சம்பாதிக்க இம்மூவர்களும் குரு சொன்ன எல்லாக் காரியங்களையும் செய்துவந்தனர். ஒரு நாள் குருதௌம்யர் ஆருணியைத் தன் நஞ்சைநிலத்துக்குத் தண்ணீர் பாயும் நீர்மடையை அடைத்துவரும்படி ஆக்ஞையிட்டார். ஆருணி அவ்வாறே அவருடைய நிலத்துக்குப் போய் தண்ணீர் வெளியே போகாதபடி மடையை மண்ணை வெட்டி அடைக்க எத்தனித்தும் மடை அடைபடவில்லை. தண்ணீர் பெருவாரியாய் வெளியே போய்வந்தது. உடனே சிறிதும் யோசியாமல் ஆருணி நிலத்தின் குறுக்கே தானே படுத்துத் தன்மீது மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு ஓர் அணையைப்போல் செய்து சிறிதும் ஜலம் வெளியே போகாமல் தடுத்து நிலத்தில் நன்கு ஜலம் பாயச் செய்து வந்தார். ஒன்றிரண்டு நாள் கழிந்து குருதௌம்யர் ஆருணியைக் காணுமல் மற்ற சிஷ்யர்களைப் பார்த்து "அந்தப் பாஞ்சாலநாட்டான் ஆருணி எங்கே சென்ருன்" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "தங்கள் ஆக்ஞைப்படி அவர் தங்கள் நிலத்துக்கு மடையை அடைக்கச் சென்ருர்; இன்னும் வரவில்லை" என்று சொன்னுர்கள். "அப்படியானுல் அவனைப் போய் பார்ப்போம்" என்று ஆருணியைப் பார்ப்பதற்காக குருதௌம்யர் எல்லோருடன் அங்கு சென்ருர். அங்கு ஆருணியைக் காணுமல் குருதௌம்யர் "ஹே ஆருணே! பாஞ்சால்ய! எங்கு சென்ருய்? வத்ஸா! வா" என்று கூப்பிட்டார். மடைவாயிலில் படுத்திருந்த ஆருணி தன் குரு கூப்பிடுவதைக் கேட்டு தன்மீதிருந்த மண்களை எல்லாம் தள்ளி அணையை பேதித்துக் கொண்டு வெளியே எழுந்துவந்து "குரோ! தங்கள் ஆக்ஞைப்படி மடைவாயை மண்ணைக்கொண்டு அடைக்க முடியவில்லையாதலால் நானே படுத்து அடைத்துத் தண்ணீரைப் பாய்ச்சிக்கொண்டிருந்தேன். தங்கள் குரலைக் கேட்டதும் நான் அங்கிருந்து எழுந்துவந்தேன்; நான் இனி என்ன செய்யவேண்டுமோ; ஆக்ஞாபித்தால் செய்கிறேன்" என்ருர். இதைக் கேட்டு குருதௌம்யர் ஆச்சரியப்பட்டு "மண் அணையை பேதித்துக்கொண்டு நீ எழுந்துவந்ததால் இனி உனக்கு உத்தாளகர் என்று

பிரசித்தி ஏற்படப்போகிறது. என் வார்த்தையின்படி நீ நடந்தால் உனக்கு சர்வ மங்களம் உண்டாவதோடு எல்லா வேதசாஸ்திரங்களும் தர்மசாஸ்திரங்களும் நீ படிக்காமலேயே உன் மனதிற்குச் சுயமாகத் தோன்றட்டும்" என்று அனுக்ரஹித்தார். அவ்வாறே உத்தாளகர் மஹா ப்ரம்மக்ஞானி ஆனார். சிஷ்யன் உபமன்யுவையும் குருதௌம்யர் பரீக்ஷிக்காமல் வித்தையை அளிக்கவில்லை. உபமன்யுவை குருதௌம்யர் ஒரு சமயம் தன் பசுக்களை மேய்த்துவரும்படி ஆக்ஞையிட்டார். உபமன்யுவும் மிகுந்த பக்தியுடன் குருவின் பசுக்களை சமீபத்திலுள்ள காட்டிற்கு ஓட்டிக்கொண்டுபோய் பகலெல்லாம் மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு மாலையில் வீடு வந்து உபாத்யாயரை வணங்கிவிட்டு எதிரில் நின்றார். குருதௌம்யர் உபமன்யுவை உற்றுப் பார்த்து "இன்று பகலில் நீ என்ன சாப்பிட்டாய்? சிறிதும் உன் தேகம் வாட்டமடையாமல் இருக்கிறதே" என்று கேட்டார். அதற்கு உபமன்யு "மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டு சமீபத்திலுள்ள கிராமத்திற்குப் போய் நான் பிக்ஷை எடுத்துச் சாப்பிட்டேன்" என்றார். "உனக்குக் கிடைத்த பிக்ஷையை எனக்குக் கொடாமல் நீ சாப்பிடலாகாது" என்றார் குருதௌம்யர். "சரி, அப்படியே ஆகட்டும்" என்றார் உபமன்யு. மறுநாள் முதற்கொண்டு உபமன்யு பிக்ஷையை வாங்கிவந்து குருதௌம்யரிடம் கொணர்ந்து கொடுப்பார். குரு அந்த பிக்ஷை பூராவற்றையுமே தான் எடுத்துக்கொண்டு அனுப்பிவிடுவார். உபமன்யு ஒன்றும் பேசாமலேயே திரும்பிப் போய்விடுவார். குருதௌம்யர் உபமன்யு முன்போலவே களை இல்லாமல் மேய்ச்சலிலிருந்து திரும்பிவருவதைக் கண்டு "நீ கொணர்ந்த எல்லா பிக்ஷையையும் நான் எடுத்துக்கொள்கிறேனே! நீ என்ன சாப்பிடுகிறாய்? உன் முகத்தில் களை இல்லையே! காரணமென்ன?" என்று கேட்டார் ஒரு நாள். "முதற் தடவை எடுத்த பிக்ஷையை நான் உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். இரண்டாந்தரம் வேறிடத்தில் நான் பிக்ஷை வாங்கி பகலில் என் வயிறு வளர்க்கிறேன்" என்றார் உபமன்யு. அதற்கு குருதௌம்யர் "இது குருகுலவாஸத்தின் முறை ஆகாது. இரண்டாந்தரமும் நீ பிக்ஷை எடுத்தால் உன்னைப்போல் பிக்ஷான்னம் உண்பவர்களுக்கு வசதி இல்லாமல் நீ செய்ததாய் ஆகும். இனி நீ அவ்வாறு செய்யாதே" என்று ஆக்ஞையிட்டார். "அப்படியே 'ஆகட்டும்" என்று சொல்லிப் பசுக்களை வழக்கப்படி மேய்த்துவிட்டு மறுநாள் மாலையில் வந்தபொழுது உபமன்யுவின் முகம் வழக்கப்படி சிறிதும் வாட்டமில்லாமலேயே இருந்ததை குரு கண்டார். "இன்று என்ன சாப்பிட்டாய்" என்று கேட்க "இந்தப் பசுக்களின் பாலைச் சிறிது அருந்தினேன்" என்றார் உபமன்யு. அதத்குக் குரு

தௌம்யர் "என் பசுக்களின் பாலை அருந்த நான் அனுமதி தரவில்லையே! என் அனுமதியில்லாமல் இனி இதைச்செய்யாதே" என்றார். மறுநாள்முதற் கொண்டு உபமன்யு என்ன செய்கிறார் என்பது தெரியவில்லை. வழக்கப் படி பகலெல்லாம் மாடுகளை மேய்த்துவிட்டு மாலையில் திரும்பிவருவார். முகம் தெளிவாயும் இருந்தது. அதைக்கண்டு குருதௌம்யர் "இப்போது என்ன சாப்பிடுகிறாய்" என்று கேட்டார். "நான் தங்களுடைய ஆக்ஞைப் படியே நடக்கிறேன். மாட்டின் பாலைக் குடிப்பதில்லை. கன்றுகள் ஊட்டிக் கொண்டிருக்கும்பொழுது அவைகளின் கடைவாயிலிருந்து வெளியே பெருகிய நுரைகளைத்தான் உண்கிறேன். அதனால் எனக்குப் பசிக்களை இல்லை" என்று உபமன்யு சொன்னார். "சிஷ்யா! இதுவும் சரியன்று; என் கன்றுகள் ஒருக்கால் உன்மீது விசுவாசங்கொண்டு சுயம் பாலைப் பூராவாய் அருந்தாமல் உனக்காக நுரையாகக் கொட்டிவிடக்கூடும். அதனால் அவைகளின் விருத்திச்சேதம் செய்ததாய் ஆகும். இனி நீ அதையும் சாப்பிடலாகாது" என்றார் குருதௌம்யர். உபமன்யு இதைக் கேட்டு "குரோ! நான் இனி அப்படிச் செய்வதில்லை" என்று சொல்லி வழக்கப்படி மாடுகளை மேய்ச்சலுக்குக் கொண்டுபோனார். அன்று நடுப் பகலில் உபமன்யுவுக்குப் பசி அதிகரித்தது; நாற்புறமும் பார்த்தார். எதைச் சாப்பிடுவது என்று தோன்றவில்லை. எதையும் குரு தடுத்திருப் பது ஞாபகத்திற்கு வந்தது. எதற்கும் அவருடைய அனுமதி அவசியம் என்று தோன்றியது. "குருவுக்கு வேண்டிராத வஸ்துக்களைத் தின்றால் என்ன?" என்று நினைத்து பசியின் கொடுமையால் அங்கு முளைத்திருந்த எருக்கஞ் செடிகளிலிருந்து ஒரு பிடி இலைகளை எடுத்து மென்று தின்று விட்டார். காலாக்னி சத்ருசமாய் அத்யந்தம் உஷ்ணமான அந்த எருக்கஞ் சாறு உள்ளே போகவும், பகீரென்று ஓர் ஆவி கிளம்பி, உபமன்யுவின் இரண்டு கண்களும் அவிந்துபோயின, நடக்கமுடியவில்லை; பாதை தெரிய வில்லை; தட்டுத்தடுமாறி மெதுவாய்ச் சிறிது தூரம் நடந்துவரும்பொழுது வழியில் கைப்பிடிச்சுவர் இல்லாத ஓர் கிணர் இருக்கவும் அதற்குள் கால் தவறி உபமன்யு விழுந்துவிட்டான். எப்போதும்போல் மாலையில் உபமன்யு திரும்பி வராததைக்கண்டு குருதௌம்யர் சந்தேகித்தார். "நான் உபமன்யுவை எதையும் சாப்பிடாதிருக்க தடுத்தேன். அதனால் அவன் கோபமடைந்து இங்கு வராமல் நின்றுவிட்டான்போலும். வனம் சென்று அவனைத் தேடிப் பார்ப்போம்" என்று சொல்லி சிஷ்யர்களுடன் அவன் போகும் வனம் சென்றார். "வத்ஸ! உபமன்யோ! எங்கிருக்கிறாய்! வா" என்று பெரும் சப்தம் போட்டார். குருதௌம்யரின் வார்த்தை யைக் கேட்டதும் உபமன்யு 'குரோ! நான் இந்தக் கிணற்றில் விழுந்

திருக்கிறேன் " என்றார். " நீ எப்படி விழுந்தாய் " என்று குரு கேட்க, " நீங்கள் எதையும் சாப்பிட தடுத்துவிட்டதால் நான் பசியின் கொடுமையால் எருக்க இலைகளைச் சாப்பிட்டேன், அதனால் இரண்டு கண்களும் அவிந்துபோய் இந்தக் கிணற்றில் விழுந்துவிட்டேன்" என்றார் உபமன்யு. " கண் போயிருந்தால் தேவர்களின் வைத்தியர்களான அசுவினி தேவர்களை ஸ்தோத்திரம் செய். அவர்கள் உனக்குக் கெட்டுப்போன கண்களைக் கொடுப்பார்கள் " என்றார் குருதௌம்யர். ஸ்தோத்திரம் செய் என்று குருவின் அனுக்ரஹம் ஏற்பட்ட மாத்திரத்தாலேயே உபமன்யு எவ்வாறு வேதங்களின் தாத்பர்யார்த்தத்தை அறிந்துகொண்ட பிரம்மக்ஞானி ஆனார் என்றும், எவ்வளவு சிலாக்யமான ரீதியில் அவர் துதித்திருக்கிறார் என்பதையும் அடுத்த இதழில், மகாபாரதத்தில் மிக்க ப்ரசித்தமான, இந்த அசுவினி ஸ்துதியின் மூலத்தையும் சுலபமாய் அர்த்தம் செய்யப்படமுடியாதிருக்கும் த்வைதபரமான அதன் அர்த்தத்தையும் எமது மித்திரன் வாசகர்களுக்காக விவரிப்போம்.

இந்த ஸ்தோத்திரத்தால் அசுவினிதேவர்கள் மனமகிழ்ந்து ப்ரத்யக்ஷமாய் நேரில் வந்து கையில் ஓர் அப்பத்தை எடுத்துக்கொண்டுவந்து உபமன்யுவிடம் கொடுத்து அதைச் சாப்பிடும்படி சொன்னார்கள். அதற்கு உபமன்யு " நான் இதை என் குருவுக்கு அர்ப்பணம் செய்யாமல் புஜிக்க மாட்டேன் " என்று மறுத்துவிடவும், அசுவினிதேவர்கள், " உபமன்யுவே ! முன்பு உன் குரு எங்களைத் துதித்தார். இதேமாதிரி நாங்கள் உன் குருவுக்கு ஓர் அப்பத்தைக் கொடுத்தோம். அவர் அவருடைய குருவுக்கு அர்ப்பணம் செய்யாமலேயே அதைப் புஜித்துவிட்டார், உன் குரு செய்தமாதிரியே நீயும் உன் குருவுக்கு அர்ப்பணம் செய்யாமல் சாப்பிடலாம். கெட்டுப்போன உன் பார்வை வந்துசேரும் " என்று அசுவினி தேவர்கள் சொன்னார்கள், அதற்கு உபமன்யு " என் குரு சொன்னபடி நான் உங்களை ஸ்தோத்திரம் செய்தேன்; நீங்களும் ப்ரஸன்னமாய்விட்டீர்கள்; என் பார்வை வரும் என்று என் குரு சொல்லியிருக்கிறார். எனக்கு கண் வரும் என்பது சந்தேகமில்லை. ஆனால் நீங்கள் அப்பத்தைக் கொடுத்துச் சாப்பிடச்சொல்கிறீர்கள். நான் அதை என் குருவுக்கு அர்ப்பணம் செய்துதான் சாப்பிடுவேன். இல்லாவிட்டால் சாப்பிடமாட்டேன் " என்று சொல்லிவிடவும், அசுவினிதேவர்கள் உபமன்யுவின் குருபக்தியை வெகுவாய் மெச்சி " நீர் உமது குருவை மிஞ்சிவிட்டீர் ஆதலால் உமது குருவைவிட நீர் விசேஷ மகிமை வாய்ந்தவராய் இருப்பீராகவும். உமது குரு சிஷ்யர்களிடம் கடின சித்தமுள்ளவர். ஆதலால் அவர் இரும்பு பற்களுள்ளவர் ஆவார். நீர் சிஷ்யர்களிடம் பரம தயாளு

வாய் இருக்கப்போகிறீர். ஆதலால் நீர் தங்கப்பற்கள் உள்ளவர் என்று பிரசித்தி ஏற்படப்போகிறது. உமக்கு திவ்ய பார்வையையும்ஸர்வ ச்ரேயஸ்ஸும் உடனே வரட்டும்'' என்று அவர்கள் அனுக்ரஹித்து மறைந்தனர். உடனே உபமன்யுவுக்கு போன கண்பார்வை வந்து குருதௌம்யர் இருந்த இடம் வந்து அவரை நமஸ்கரித்தார். நடந்த விருத்தாந்தத்தைக் கேட்டு உபமன்யுவிடம் குருதௌம்யர் மகிழ்ந்தார். '' எல்லா வேத சாஸ்திரங்களும் தர்மசாஸ்திரங்களும் தாமாகவே படிக்காமல் உம்முடைய மனதுக்குத் தோன்றட்டும்'' என்று குருதௌம்யர் உபமன்யுவுக்குப் பரமானுக்ரஹம் செய்தார். உபமன்யுவும் அவ்வாறே பிரம்மக்ஞானி ஆனார். பைதர் என்ற மூன்றும் சிஷ்யருக்கும் குருதௌம்யர் பரீக்ஷை நடத்தினார். அவரை வெளியே எங்கும் அனுப்பவில்லை. வீட்டிலேயே நுகத்தடியில் காளையைப் பூட்டி வெய்யிலிலும் மழையிலும் பனியிலும் போகச்செய்து காரியங்களைச் செய்யச்சொல்வதுபோல் குருதௌம்யர் பைதரை நடத்தி அவருடைய மனோதிடத்தையும் குருபக்தியையும் பரீக்ஷை செய்தபின் ஸமஸ்த வித்தைகளும் ஏற்படும்படி அனுக்ரஹித்தார். இந்த குருதௌம்யரின் திருஷ்டாந்தம் அவசியம் கவனிக்கத்தக்கதாய் ஆகும். உத்தாலகரைப்போல் சிஷ்யன் குருவின் காரியத்தை தன் சரீரத்தையும் தியாகம் செய்து முடித்துத் தீரவேண்டும் என்றும், உபமன்யுவைப்போல் குரு தடுத்துவிட்டால் அன்ன ஆஹாரத்தையும் விட்டுவிட வேண்டும் என்றும், பைதரைப்போல் அநர்ஹமான காரியத்தையும் குரு செய்யச்சொன்னால் சீதம் உஷ்ணம் முதலானவைகளை சகித்துக்கொண்டும் அதைச்செய்யவேண்டும் என்றும் அறியவேண்டியதாகும். வித்தைக்கு குருவின் அனுக்ரஹம் ப்ரதானமாகும் என்றும், அவருடைய அனுக்ரஹம் ஏற்பட்டால் படிக்காமலேயே எல்லா வித்தைகளும் மனதிற்குத் தோன்றும் என்றும், வித்தையால் ஏற்படக்கூடிய ஸர்வ ச்ரேயஸ்ஸும் உண்டாகும் என்றும் அறியப்படவேண்டியதாகும்.

விவாஹ விளம்பரம்.

பெண் தேவை.

வரன் ஹரித்ஸகோத்ரம், 40 வயது, இரண்டாம் விவாஹம், சந்ததி இல்லை, கவர்ண்மெண்டு உத்யோகம், ரூ. 130 சம்பளம், ஆறுவேலு கர்ணடகன்.

வரன் தேவை.

பெண் தேசஸ்தள், 16 வயது, நான்காவது பாரம் வரை படித்தவள், நல்ல அழகு, விச்வாமித்ர கோத்திரம், வரன் சுமார் சொத்து உள்ளவன் வேண்டும்.

விவரங்களுக்கு அடியிற்கண்ட விலாஸதாருக்கு எழுதவும்.—

T. B. ராமசந்திர ராவ்,
சாமராவ் வீதி, திருவாதி, தஞ்சாவூர் ஜில்லா.

N. B:— மாத்வ வகுப்பாரின் விவாஹ விளம்பரம் மாத்வர்களுக்கு உதவவேண்டி மாத்வமித்திரனில் இலவசமாய் எவ்வகை சார்ஜ் அன்னியில் ஓர் சஞ்சிகையில் எப்போதுமே பிரசுரிக்கப்பட்டு வருகிறது என்பதை வாசகர்கள் அறிவார்களாக. தனிப்பிரதி எக்காரணத்தைக்கொண்டும் அனுப்பப்படமாட்டாது.

திருக்கோயிலூர் ஸ்ரீ ரகூத்தம ஸ்வாமிகளின் ஆராதனே.

நாளது வருஷத்திய ஆராதனே புஷ்ய சுத்த தசமி (5–1–44) முதற்கொண்டு த்ரயோதசி (8—1—44) முடிய 4 நாட்கள் வழக்கம்போல் விசேஷ அபிஷேகங்கள், அலங்காரங்கள், அலங்காரபந்தி போஜனங்கள், தனி ப்ராம்மணபோஜனங்கள், ஊர்வலம் முதலானவைகளுடன் நடத்தப்படும். நாடெங்கும் நிறைந்திருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளின் பக்தகோடிகள் வழக்கப்படி வந்திருந்து சந்தரிசித்து, தீர்த்த ப்ரஸாதங்களேப் பெற்று ஸ்ரீ ஸ்வாமிகளின் பரமானுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாக வேண்டப்படுகிறது. நாளது வருஷத்தில் சந்தா வசூலுக்காக வெளியே எமது ஏஜண்டுகளே நாம் அனுப்புவதில்லேயாதலால் அவரவர்கள் இப்புனிதமான கைங்கரியத்திற்கு அவரவர்களால் இயன்றளவு பொருளுதவியைத் திருக்கோயிலூர் வக்கீல் ஸ்ரீமான் P. R. நாராயணராயருக்கு மணியார்டர் மூலமாய் அனுப்பக் கோரப்படுகிறது.

மானேஜிங் டிரஸ்டி,

S. ராகவேந்திர ராவ்,

ரிடயர்டு டிப்டி கலெக்டர், கடலூர்.

விசேஷ தினங்கள்.

16—12—43	குருவாரம்	தனுஸ் ஸங்க்ரமண புண்யகாலம் மணி 8-59க்குமேல் தனுர் மாஸம் முதற்பூஜை (காலண்டரில் 20உ என்று அச்சாகியிருப்பது பிழை)
23—12—43	குருவாரம்	ஏகாதசி உப.
26—12—43	பானுவாரம்	தர்சம். திலதர்ப்பணம்.
27—12—43	சோமவாரம்	விஷ்ணுப. உப. ஹனுமத்ஜயந்தி. அசுவத்த பிரதக்ஷிணம்.
30—12—43	குருவாரம்	ச்ரவணம் உப. இல்லே. விஷ்ணுப. உப. இல்லே.
1— 1—44	சனிவாரம்	தனுர் வ்யதிபாதம்.
6— 1—44	குருவாரம்	ஏகாதசி உப. ஸ்ரீ ரகூத்தம ஸ்வாமிகளின் புண்யதினம்
9— 1—44	பானுவாரம்	ஆர்த்ராதரிசனம்.
10— 1—44	சோமவாரம்	பௌர்ணமி. மாகஸ்நானம் ஆரம்பம். விஷ்ணுப. உப.

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீ ராகவேந்திரஸ்தோத்திரம் (தமிழிலும், தேவநாகரத்திலும் மூலமும் தமிழில் உரையும்) 2-ம் பதிப்பு 0 3 0

2. ஷடி ஸ்தோத்திரம் உள்பட ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அதி அற்புத ஜீவிய சரித்திரம் (தமிழ்) 0 8 0

3. ஸ்ரீவாயுஸ்துதி (தேவநாகரத்தில் மூலமும், தமிழில் உரையும் புனஸ்சரண முறையுடன் 2-ம் பதிப்பு 0 5 0

4. மாத்வஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமந்த்ர ஸ்தோத்திரங்கள் (தமிழிலும், கன்னடத்திலுமுள்ள 38 அபூர்வமானவைகள் கொண்டது, இதுவரை யாவராலும் பிரசுரிக்கப்படாதது. 0 3 0

5. துவைதமத விளக்கம் (ஸ்ரீமத்வாசாரியார் ஜீவிய சரித்திரம் ஆப்டோன் படத்துடனும் தமிழ்). 0 2 0

6. கும்பகோண மாகாத்மியம் (தமிழ்) 0 2 0

7. ஸ்ரீமத் பாகவதம் விஷ்ணு புராணத்தின்படி துருவ சரித்திரம் (நாடகம்-தமிழ்) 0 4 0

8. மாத்ருகாமாலாஸ்தவம், நவரத்னமாலா முதலிய அற்புத ஆறு நூல்கள் (ஸம்ஸ்கிருதம் தேவநாகரத்தில்) 0 2 0

9. மாத்வ புருஷர்களின் அவஸர பூஜா பத்ததி 0 4 0

10. ஜீவப்ரம்மபேதம் ஜகத்ஸத்யம் முதலான நான்கு மத்வமத ப்ரமேயங்களை நிரூபிக்கும் பகவத் கீதாதத்வம் (தமிழிலும் தேவநாகரத்திலும் மூலமும், தமிழில் அர்த்தமும்) சுமார் 250 பக்கங்கள் 0 8 0

11. மாத்வமித்திரன் ஒன்று முதல் ஏழு வாலியங்கள் சுமார் 2200-பக்கங்களைக்கொண்டது மணிமஞ்ஜரி மத்வ விஜயம் ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான மாத்வ கிரந்தங்கள், உபநிஷத்துக்கள் புருஷஸூக்தம் ஸந்தியாவந்தனம் முதலான மந்திரங்கள் த்வாதச ஸ்தோத்திரம் முதலான ஸ்தோத்திரங்கள் ஸ்ரீராகவேந்திர் முதலான பல மாத்வ மகான்கள், தாஸர்கள் இவர்களின் சரித்திரங்கள் புராண விரத கதைகள் ஆசார அனுஷ்டானங்கள் தர்ம சாஸ்திர குறிப்புகள் முதலான பதினாயிரக்கணக்கான விஷயங்களைக் கொண்டது. V. P-ல் கிடையாது. பூரா பணமும் அட்வான்ஸில் தேவை. ரயில் பார்சல் செலவுதனி. முன்விலை ரூ. 21 தற்போது ரூ. 5—0—0 தான்

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்

டி. எஸ். ஆர். அண்டு கம்பெனி, கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனா திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப் பாக்கு
வாஸனைச் சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸர் பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கறி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் திணுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித்தைலம்,
அரைக்கீரை விதைத்தைலம்,
மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed by N. Subramania Iyer, at Sri Venkateswar Power Printing Wor[ks]
Edited & Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.